*36*

# நீங்கள் மரிக்க விருப்பமாய் இருக்கின்றீர்களா?

## (11:7-14)

ஒருமுறை வெஸ்ட் அவர்கள் கவனித்துள்ளபடி, வெளிப்படுத்தின விசேஷம் எழுதப்பட்ட காலத்தில் சபைகளில் ஏற்படுத்தப்பட்ட அறிவிப்புகள், இன்றைய நாட்களில் சபையில் ஏற்படுத்தப்படும் அறிவிப்புகளில் இருந்து அதிகம் மாறுபட்டதாக இருந்திருக்க வேண்டும்.[1] இப்போது நாம், சபையாருக்கு ஐக்கிய உணவுகள், இளைஞர்களுக்கான செயல்பாடுகள், பொருளாதாரக் கூட்டங்கள் ஆகியவற்றைப்பற்றி அறிவிக்கின்றோம். முதல் நூற்றாண்டின் இறுதியில் ஏற்படுத்தப்பட்ட அறிவிப்பில், கிறிஸ்துவை மறுதலிக்க மாட்டேன் என்று கூறியதால் சிமியோன் கொலை செய்யப்பட்டு மரணம் அடைய நேர்ந்தது; மரியாள் "கர்த்தரும் தேவனுமான செசார்" என்று கூறாததால் சிறைவைக்கப்பட்டது; சிறுவனான யோசுவாவின் பெற்றோர் இருவரும் வேதசாட்சிகளாக மரித்திருந்ததால் அவனைக் காப்பதற்குப் புதிய இல்லம் தேவைப்பட்டது போன்றவை பற்றிய செய்தி உள்ளடங்கி இருந்திருக்கும்.

தேவாலயத்தை அளத்தல் பற்றிய நமது பாடத்தில் நாம், தேவன் தமது மக்களைப் பாதுகாப்பதாக வாக்குத்தத்தம் செய்தார் என்பதை வலியுறுத்தினோம். இருப்பினும் இது, அவர்கள் ஒருக்காலும் துன்புறுத்தப் படாதிருப்பார்கள் என்று அர்த்தப்படவில்லை. எல்லாரும் இல்லை யென்றாலும், பெரும்பான்மையானவர்கள் துன்புறுவார்கள். சிலர் மரிக்கவும் நேரலாம். இந்த சத்தியமானது, அதிகாரம் 11ல் இரண்டு சாட்சிகளின் வரலாற்றில் அளவையியல் ரீதியாக வெளிக்கொண்டு வரப்படுகிறது.

நமது முந்திய பாடத்தில் நாம், தேவனுடைய சாட்சிகளைப் பற்றி நீங்கள் அறியவேண்டிய மூன்று உண்மைகளைப் பற்றிக் கலந்துரை யாடினோம்.[2] இந்தப் பாடத்தில் நாம் இன்னும் இரு உண்மைகளைப் பற்றிக் கூடுதலாகக் காண்போம்.

### மனிதர்கள் உங்களைக் கொலைசெய்யலாம் (11:7-10)

இரண்டு சாட்சிகளுக்குத் தேவன் கொடுத்த அதிகாரங்களைப் பற்றி

*வாசித்தபின்பு நீங்கள், 7ம் வசனத்தைக் கண்டு திகைப்படையலாம்: ''அவர்கள் தங்கள் சாட்சியைச் சொல்லி முடித்திருக்கும்போது, பாதாளத்திலிருந்தேறுகிற[3] மிருகம் அவர்களோடே யுத்தம்பண்ணி,[4] அவர்களை ஜெயித்து, அவர்களைக் கொன்றுபோடும்'' (வசனம் 7). ("இரண்டு சாட்சிகள் பிரசங்கித்தல்" என்ற விளக்க படத்தைக் காணவும்.) கிறிஸ்தவர்கள் தேவனுடைய ஊழியத்தைச் செய்யும்படி அவரால் பாதுகாக்கப்பட்டிருந்தாலும், அந்தப் பாதுகாப்பு என்பது ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்கானதாக உள்ளது; சிலவழிகளில் நாம் தாக்குதலுக்கு உள்ளாகுபவர்களாய் இருக்கின்றோம். வசனம் 7ல் விவரிக்கப்பட்டபடி, இன்னமும் நாம் கொலைசெய்யப்படக்கூடும்.[5]*

*கொலை செய்வதற்கு பொறுப்பாளியாக இருக்கும் ஒன்று, வசனம் 7ல் ''மிருகம்'' என்று அழைக்கப்படுகிறது. இந்த உயிரினமானது - இப்புத்தகத்தின் கடைசிப் பாதியில்[6] பிரதான காரணியாக இருக்கும் - இது ஏறக்குறைய சாதாரணமாக அறிமுகப்படுத்தப்படுகிறது.[7] அதிகாரம் 13 மற்றும் 17 வரையிலும், நமக்கு இந்த மிருகத்தைப் பற்றி விபரமாக கூறப்படாது. இது வெளிப்படுத்தின விசேஷத்தில் அசாதாரணமானதாக இருப்பதில்லை. பல விஷயங்கள் இப்புத்தகத்தின் பிற்பகுதியில் மிகவும் முக்கியமானவைகளாய் இருந்தாலும், அவைகள் அதிகாரம் 2 மற்றும் 3ல் விளக்கம் எதுவுமின்றி அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன - இவற்றில் "பரலோகத்திலிருந்திறங்கிவருகிற புதிய எருசலேம்" (3:12; காணவும் 21:2) போன்றவை உள்ளடங்குகின்றன. அதுபோலவே, 17ம் அதிகாரம் வரையிலும் பாபிலோன் அறிமுகப்படுத்தப்படாமலும் (வசனம் 5ஐக் காணவும்), 18ம் அதிகாரம் வரையிலும் அது அழிக்கப்படாது இருப்பினும் (வசனங்கள் 2, 10, 21 ஆகியவற்றைக் காணவும்), 14:8 வசனமானது பாபிலோனின் வீழ்ச்சியைப் பற்றி அறிவிக்கிறது.*

*இப்புத்தகத்தின் பிற்பகுதி வரையிலும் யோவான் இந்த மிருகத்தைப் பற்றிய விபரங்களைத் தராது இருப்பதால், அவரது முறைமையையே பின்பற்றுவேன்.[8] இப்போதைக்கு, இந்த மிருகம் என்பது ''பாதாளத்திலிருந்து'' ஏறிவந்ததாக, தேவனுடைய வல்லமைமிக்க விரோதியாக இருந்தது என்பதை உணர்ந்து அறிதல் போதுமானதாக உள்ளது. ஐந்தாம் எக்காளம் மற்றும் வெட்டுக்கிளிகள் பற்றிய பாடத்தில் நாம், பாதாளம் என்பது ''பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற அக்கினியும் கந்தகமுமான கடல்" அல்ல (வெளிப்படுத்தின விசேஷம் 20:10; காணவும் மத்தேயு 25:41) என்று நாம் வலியுறுத்தியிருந்தோம். மாறாக பூமியின் மேற்பகுதியை அடையும் ஒரு முனைத்தடியைக் கொண்டு, தரைக்குக் கீழே உள்ள ஒரு குகை (பாதாளக்குழி) என்ற அடையாளத்துவமானது, பொல்லாத ஆவிகள் நியாயத்தீர்ப்புக்காகக் காத்திருக்கும் இடத்தை - பயமுறுத்தும் உயிரினங்கள் வளைந்து நெளிந்து கொண்டுள்ள தரைக்குக் கீழான ஒரு குகையை - குறிப்பதாக உள்ளது.[9]*

*வசந்தகாலம் வருகிறபோது, அது உயிரினங்கள் தங்கள் உறக்கத்தில் இருந்து விழித்தெழக் காரணமாவது போலவே, வசனத்தைப் பிரசங்கித்தது*

*மிருகத்தை எழுப்பியது - மற்றும் அவன் சாவுக்கேதுவான நோக்கத்துடன் பயங்கரம் நிறைந்த அந்தக் குழியில் இருந்து முன்னேறி வந்தான். அவன், தட்பவெப்ப நிலையைக் கட்டுப்படுத்தியிருந்த, பலத்த அற்புதங்களைச் செய்திருந்த, அக்கினியை சுவாசித்துக் கொண்டிருந்த மனிதரை வெற்றி கொள்வது சாத்தியமாய் இருந்ததா? ஆம்: அந்த மிருகம், "அவர்களை ஜெயித்து, அவர்களைக் கொன்றுபோடும்" என்று யோவான் கூறினார் (வசனம் 7).*

*நாம், "தேவனே, இது நடக்கும்படி நீர் அனுமதித்தது ஏன்?" என்று கதறத் தலைப்படுகின்றோம். இதற்கு, நமது வசனப்பகுதி ஒரு பாதி பதில் அளிக்கிறது. வசனம் 7ன் தொடக்கத்தை வாசியுங்கள்: "அவர்கள் தங்கள் சாட்சியைச் சொல்லி முடித்திருக்கும்போது."[10] அந்த மிருகத்தினால் இவ்விரு சாட்சிகளையும் கொன்றுபோட முடிந்திருந்தது, ஆனுல் அவர்கள் தங்கள் ஊழியத்தை முடிப்பதற்கு முன்பு அல்ல, வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், அந்த மிருகமானது தீர்க்கதரிசிகளைக் கொன்று போட்டது ஆனால் அவர்களின் சாட்சியத்தை அந்த மிருகத்தால் அழிக்க இயலவில்லை.*

*இந்த இரண்டு சாட்சிகளும் யோவானின் நாட்களில் வசனத்தைப் பரப்பிக்கொண்டிருந்த உண்மையுள்ள கிறிஸ்தவர்களைக் குறித்தனர் என்று நான் கருத்துத் தெரிவித்திருப்பதால், வசனம் 7ஐ நாம் முதல் நூற்றாண்டின் சந்தர்ப்பப் பொருளில் வைத்துப் பார்ப்போம்.[11] கிறிஸ்தவப் பிரசங்கியார்களும் போதகர்களும் மரணத்திற்கு உட்படுத்தப் பட்டிருந்தனரா? ஆம். இது அவர்களின் சாட்சியத்தை அழித்ததா? இல்லை: தேவனுடைய வசனம் இது வரைக்கும் உயிருடன் உள்ளது - இந்த உலகம் உள்ளவரைக்கும் இது தொடர்ந்து நீடித்திருக்கும். தேவனுடைய விரோதிகளினால் நற்செய்தியின் வளர்ச்சியை நிறுத்தி வைக்க இயலவில்லை - இதை அவர்களால் ஒருபோதும் செய்ய இயலாது. சத்தியம் வெற்றிபெறும் என்று தேவன் ஆணையிட்டுள்ளார்![12]*

*அந்த மிருகம், இரண்டு சாட்சிகளையும் கொலைசெய்தபோது, சத்தியம் வெற்றிபெற்றதாகக் காணப்படவில்லை. மாறாக பொல்லாங்கு வெற்றி பெற்றதாகவே காணப்பட்டது. 8முதல் 10வரை உள்ள வசனங்கள், மிருகத்தினால் இரண்டு சாட்சிகள் கொலைசெய்யப்பட்ட இந்தச் சித்தரிப்பை முன்வைக்கிறது:*

> *... அவர்களுடைய உடல்கள்[13] மகா[14] நகரத்தின் விசாலமான வீதியிலே கிடக்கும். அந்த நகரம் சோதோம் என்றும் எகிப்து என்றும் ஞானார்த்தமாய்ச் சொல்லப்படும், அதிலே நம்முடைய கர்த்தரும் சிலுவையிலே அறையப்பட்டார். ஜனங்களிலும், கோத்திரங்களிலும், பாஷைக்காரரிலும், ஜாதிகளிலுமுள்ளவர்கள் அவர்களுடைய உடல்களை மூன்றரை நாள் வரைக்கும் பார்ப்பார்கள், அவர்களுடைய உடல்களைக் கல்லறைகளில் வைக்கவொட்டார்கள். அவ்விரண்டு தீர்க்கதரிசிகளும் பூமியின் குடிகளை வேதனைப் படுத்தினபடியால் அவர்கள் நிமித்தம் பூமியில் குடியிருக்கிறவர்கள் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து, ஒருவருக்கொருவர் வெகுமதிகளை[15]*

அனுப்புவார்கள். ("ஏளனம் செய்யப்பட்ட இரண்டு சாட்சிகள்" என்ற விளக்க படத்தைக் காணவும்.)

அப்போஸ்தலரின் வார்த்தைகள் மிகவும் கொடுமையான காட்சியொன்றைச் சித்தரிக்கின்றன. ஹென்றி ஸ்வீட் அவர்கள், "காட்சியாளர்களின் மகிழ்ச்சி ... மூர்க்கத்தனமானதாகவும் சிறுபிள்ளைத் தனமானதாகவும் இருந்தது என்று கூறினார்."[16] பூமியில் குடியிருந்தவர்கள் அந்த சாட்சிகளின் உடல்களைப் புதைக்க அனுமதிக்கவில்லை.[17] அதற்குப் பதிலாக, அவர்களின் உடல்களைத் தெருக்களில், பூச்சிகளும், காட்டுநாய்களும் மாம்சத்தை உண்ணும் பறவைகளும் அவற்றை நெருங்கும்படி விட்டுவிட்டனர்.

ஒரு மனிதரின் உடல் புதைக்கப்படாமல் கீழே கிடத்தப்படுதல் என்பது மாபெரும் துன்பங்களில் ஒன்றாக உள்ளது. (சங்கீதம் 79:1-3; ஏசாயா 5:25; எரேமியா 8:1, 2ஐக் காணவும்.) நான் ஒரு இளைஞனாக இருந்தபோது, ஆக்லாஹாமாவில் நடந்த தேசீயக் கண்காட்சிக்குச்சென்ற வேளையில் நான் கண்ட பயங்கரமான காட்சியொன்று என் நினைவுக்கு வருகிறது. சங்கிலிகளால் அழுத்தப்பட்டிருந்த ஒரு கூடாரத்தினுள், இரண்டாம் உலகப்போரின் முடிவில், தீமைமிகுந்த யுத்தக் குற்றவாளிகளின் உடல்கள் பொதுச்சந்திகளில் வெளிப்படையாக கிடத்திவிடப்பட்டிருந்தது எப்படி என்பதைச் சித்தரிக்கும், திகைப்பூட்டிய சித்திரங்களும் மெழுகு உருவங்களும் இருந்தன.

விசாலமான, பிரதானமான வீதியில்,[18] இரண்டு சாட்சிகளின் உடல்களும் போடப்பட்டிருந்தபோது, அவற்றைப் பார்ப்பதற்கும் கொண்டாடுவதற்கும், உலகம் முழுவதிலுமிருந்து[19] அவிசுவாசிகள் அங்கு வந்தனர். இவ்விதமாக, சத்தியம் வீழ்ந்ததாகத் தோன்றுகிறபோது தவறு அகம் மகிழ்கிறது. இவ்விதமாக பொல்லாங்கு வெற்றிபெற்றுள்ளதாக நினைக்கிறபோது, அது அபத்தமாய் மகிழ்கிறது.[20]

இந்தக் கொடூரமான காட்சியை விட்டுக் கடந்து செல்வதற்கு முன்பு நான், இது நடந்த இடத்தைப் பற்றி ஒரு வார்த்தை கூறுவது அவசியமாக உள்ளது: "அவர்களுடைய உடல்கள் மகா நகரத்தின் விசாலமான வீதியிலே கிடக்கும். அந்த நகரம் சோதோம் என்றும் எகிப்து என்றும் ஞானார்த்தமாய்ச் சொல்லப்படும், அதிலே நம்முடைய கர்த்தரும் சிலுவையிலே அறையப்பட்டார்" (வசனம் 8). "ஞானார்த்தமாய்" என்று (ஆங்கிலத்தில் இவ்விடத்தில் "mystically" என்றுள்ளது) மொழிபெயர்க்கப் பட்ட கிரேக்க வார்த்தை "ஆவிக்குரிய வகையில்" என்ற நேரடியான அர்த்தம் கொண்டுள்ளது (KJV வேதாகமத்தில் காணவும்). RSV வேதாகமத்தில் "allegorically" என்றுள்ளது; NIV வேதாகமத்தில் "figuratively" என்றுள்ளது. நீங்கள் எந்தச் சொற்றொடரை விரும்பித் தேர்ந்து கொண்டாலும், இவ்வசனத்தில் உருவக மொழிநடை பயன்படுத்தப் பட்டுள்ளது என்பது தெளிவாக உள்ளது.

இவ்வசனப் பகுதியானது இவ்விடத்தை, "அதிலே நம்முடைய கர்த்தரும் சிலுவையிலே அறையப்பட்டார்" என்று அடையாளப்

*படுத்துகிறபடியால், இந்த நகரம் உண்மையிலேயே எருசலேமாகவே உள்ளது என்று பலர் யூகிக்கின்றனர். இருப்பினும் மிகயீல் வில்காக், தகுந்த ஒரு கேள்வியைக் கேட்டார்: "சோதோம் மற்றும் எகிப்து" ஆகியவை ஒப்புவமையாகப் பயன்படுத்தப்பட்டன என்றால், "கர்த்தர் சிலுவையில் அறையப்பட்ட நகரமும் ... ஏன் ஒப்புவமையாக இருக்கக்கூடாது?"[21] எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் சுட்டிக்காண்பித்தபடி, தேவனுடைய குமாரன் ஒருமுறைக்குமேல் சிலுவையில் அறையப்பட்டு வெட்கக் கேட்டிற்கு ஆளாக்கப்பட்டார் (எபிரெயர் 6:6).*

G. B. கேயர்டு அவர்கள் *"மகா நகரம் என்ற இதே சொற்றொடரை யோவான் இன்னும் ஏழுமுறை பயன்படுத்துகின்றார் [16:19; 17:18; 18:10; 16, 18, 19, 21], மற்றும் அவ்விடங்கள் ஒவ்வொன்றிலும் ரோமாபுரியே நோக்கங்கொள்ளப்பட்டிருந்தது என்பதைத் சந்தர்ப்பப்பொருள் தெளிவாக்குகிறது"[22] என்று கவனித்துள்ளார். குறிப்பாக, இச்சொற்றொடர் காணப்படும் மற்ற ஏழு இடங்களிலும் இது "பாபிலோனே" குறிக்கிறது எனவே, இதுதான் நாம் அதிகாரம் 11ல், இந்த சொற்றொடரின் மீது இடவேண்டிய அடிப்படை விளக்கமாக உள்ளது. நாம் காணப்போகின்றபடி, ''பாபிலோன்'' என்பது வெளிப்படுத்தின விசேஷத்தில் ரோமாபுரி நகரத்திற்கு இடுகுறிச் சொற்றொடராகப் பயன்படுத்தப்பட்டுள்ளது - மற்றும் ரோமாபுரி நகரம் இந்த இரண்டு சாட்சிகளின் விபரத்திற்கு நன்கு பொருந்துகிறது (18:24ஐக் காணவும்).*

*அதிகாரம் 11ன் ''மகா நகரத்தை'' உலகில் உள்ள ஏதாவது ஒரு தனியிடத்துடன் மட்டுப்படுத்திவிடாதபடி நாம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். மார்ட்டின் ஃபிரான்ஸ்மேன், " 'மகா நகரம்' என்பது, ... மனிதர்கள் 'தேவனுடைய குமாரனைக் காலின் கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிற' (எபிரெயர் 10:29) ஒவ்வொரு மற்றும் எந்த இடத்திற்கும் அடையாளமாக உள்ளது" என்று கூறினார்.[23]*

*வசனம் 8ல் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று இடங்களும் "மகா நகரத்தின்" குணத்தைப் பற்றிப் பேசுகின்றன: அது "சோதோமின் துன்மார்க்கத்திற்கு வாரிசாக, பார்வோனின் எகிப்தினுடைய சர்வாதிகாரமாக, எருசலேமின் கண்மூடித்தனமான கீழ்ப்படியாமையாக உள்ளது."[24] மிக முக்கியமாக, இந்த மூன்று இடங்களும் அந்த நகரத்தின் முடிவைப் பற்றிப் பேசுகின்றன: சோதோம், எகிப்து மற்றும் எருசலேம் ஆகிய மூன்றும் தேவனுடைய நியாயத்தீர்ப்புக்குள் விழுந்திருந்தன - ''மகாநகரமும்'' நியாயந்தீர்க்கப் பட்டதை நாம் காணுவோம்.*

## *இறுதியில் தேவன் உங்களுக்குப் பலன் அளிப்பார்! (11:11-13)*

*உயிரற்ற இரு உடல்களைச் சுற்றியுள்ள கொண்டாட்டச் சூழல் தொந்தரவுடையதாக உள்ளது. இந்த வரலாற்றின் முடிவைப் பற்றி நாம் அறியாதிருந்தால், பொல்லாங்கின் சக்திகள் வெற்றிகொள்ளப்பட*

முடியாதவை என்று நாம் முடிவு செய்திருக்கலாம். பின்பு நாம் வசனப்பகுதியை மீண்டும் கண்ணோக்கி மிகச் சுலபமாய்க் கவனியாது விடப்படும் ஒரு சொற்றொடரை கண்டுபிடிக்கின்றோம்: "ஜனங்களிலும், கோத்திரங்களிலும், பாஷைக்காரரிலும், ஜாதிகளிலுமுள்ளவர்கள் அவர்களுடைய உடல்களை மூன்றரைநாள் வரைக்கும் பார்ப்பார்கள்" (11:9). ''மூன்றரைநாள் வரைக்கும்'' - அதாவது "மூன்றரைநாள்" மாத்திரம்.

மீண்டுமாக நாம் நாளைக்கான நம்பிக்கையின் மறைவான கருத்துடன், சோதனை, கடினமான வேளை மற்றும் பரீட்சிக்கப்படுதல் என்பவற்றுடன் இணைவு கொண்டுள்ள "$3^1/_2$" என்ற எண்ணை எதிர் கொள்கின்றோம். வசனம் 9ல் உள்ள உருவகம் முன்பு பயன்படுத்தப்பட்டுள்ளதற்கு அடிப்படையில் நேர்மாறானதாக உள்ளது: சாட்சிகள் $3^1/_2$ ஆண்டுகள் அளவாகச் சாட்சிகொடுத்தனர் (11:3), ஆனால் அவர்கள் $3^1/_2$ நாள் மாத்திரமே மரித்தவர்களாய் இருந்தனர். இவ்விரு உருவகத்தில் எதுவுமே நேரடி அர்த்தம் கொண்டதில்லை; மாறாக இவைகள் ஒரு நீண்ட கால அளவை ஒரு குறுகிய கால அளவுடன் நேரெதிராக ஒப்பிடுகின்றன. துன்மார்க்கரின் வெற்றியானது குறுகிய காலமே உயிர்வாழ்ந்தது என்பதை இந்த நேர்மாறு அறிவிக்கிறது!

நீங்கள் பொறுமையுடன் சகித்திருந்தால் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும் என்பது, கர்த்தருக்குச் சாட்சிகொடுத்தல் பற்றி நீங்கள் அறிய வேண்டிய ஐந்தாவது உண்மையாக உள்ளது. நாம் (1) நன்மை மற்றும் தீமை ஆகியவற்றிற்கு இடையிலான மோதலையும்/போராட்டத்தையும் (2) நன்மையின் தோல்வி போன்ற தோற்றத்தையும் கண்டிருக்கின்றோம். இப்போது, (3) நன்மையின் இறுதி வெற்றியைப் பற்றிக் காண்பதற்கான வேளையாக உள்ளது.

இறந்து போயிருந்த அந்த உடல்களைச் சுற்றிக் கொண்டாடிக் கொண்டிருந்தவர்கள் களிப்புடன் இருந்தபோது, எல்லாம் இழந்து போகப்பட்டது என்பதாக காணப்பட்டது. தேவனுடைய செய்தியாளர்கள் வாயடைக்கப்பட்டனர்; பொல்லாங்கின் கொடூரமான சிரிப்பை மாத்திரம் கேட்க முடிந்திருந்தது. இருப்பினும் தேவன் எப்போதுமே கடைசிச் சிரிப்பைக் கொண்டுள்ளார். துன்மார்க்கரான மனிதர்கள், நன்மையும் பரிசுத்தமும் மரணம் அடைந்ததைக் கொண்டாடியபோது, "அவர்களின் விருந்து முடியும் முன்பே அது எப்போதும் இடைமறிக்கப்படுகிறது."[25]

இந்த நாடகத்துவமான நிகழ்ச்சியை உங்கள் சிந்தையில் சித்தரியுங்கள்: ''மூன்றரை நாளைக்குப்பின்பு தேவனிடத்திலிருந்து ஜீவஆவி[26] அவர்களுக்குள் (இரண்டு சாட்சிகளுக்குள்) பிரவேசித்தது, அப்பொழுது அவர்கள் காலூன்றி நின்றார்கள்" (வசனம் 11அ).

பல ஆண்டுகளுக்கு முன்பு, பெருவருத்தம் மேற்கொண்டிருந்த இஸ்ரவேல் மக்களைக் குறிப்பிட்ட உலர்ந்த எலும்புகள் நிறைந்த பள்ளத்தாக்கு ஒன்று எசேக்கியேல் தீர்க்கதரிசிக்குக் காண்பிக்கப்பட்டது. அந்தத் தீர்க்கதரிசி கவனித்துக் கொண்டிருக்கும்போதே, அந்த எலும்புகள் (இணைவதற்காக ஒன்றுடன் ஒன்று மோதி) ஒலி எழுப்பத் தொடங்கின. எலும்புகள் ஒன்றிணைந்து எலும்புக்கூடுகளாயின. அந்த எலும்புக்

கூடுகளைச் சுற்றி தசைகளும் தோலும் மாம்சமும் ஏற்பட்டன. கடைசியில், "ஆவி அவர்களுக்குள் பிரவேசிக்க, அவர்கள் உயிரடைந்து, காலூன்றி, மகா பெரிய சேனையாய் நின்றார்கள்" (எசேக்கியேல் 37:10). சூழ்நிலைகள் எவ்வளவுதான் நம்பிக்கையற்றவைகளாகத் தோன்றினாலும், தேவன் அந்தக் சூழ்நிலையைத் திருப்ப முடியும் என்பதே எசேக்கியேலின் தரிசனத்தினுடைய அழுத்தமான கருத்தாக இருந்தது. அதுபோலவே, யோவானின் தரிசனமும் கிறிஸ்தவர்களுக்கு, "விஷயம் எவ்வளவு மோசமாக ஆனாலும், எப்போதுமே நம்பிக்கை உள்ளது! தேவனுடைய மக்கள் மேலோங்கியிருப்பார்கள்!" என்று கூறிற்று.

யோவானின் தரிசனமானது, ரோமாபுரியால் எத்தனை ஆயிரம் பேர் கொல்லப்பட்டாலும், காட்டு மிருகங்களால் அல்லது கழுமரத்தில் கட்டிவைத்து எரிக்கப்படுவதால் எத்தனை ஆயிரம் கிறிஸ்தவர்கள் இறந்தாலும், அரங்கசாலைகளின் மணல் தரையில் எவ்வளவு இரத்தம் ஊறிக்கலந்தாலும், ரோமாபுரி அரசினால் சத்தியத்தின் வளர்பெருக்கத்தை நிறுத்த முடியாது; அதினால் சபையை அழிக்க முடியாது என்று கூறியது.

ஒரு விரிவான நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்த முடியும்: பூமியில் உள்ள எந்த ஒரு சக்தியும் தேவனுடைய திட்டங்களையும் நோக்கங்களையும் ஒருக்காலும் தடம்புறளச் செய்ய முடியாது. ஆண்டுகளினூடே பலர் முயற்சி செய்துள்ளனர், ஆனால் அவர்கள் யாவரும் தோல்வியடைந்துள்ளனர். இந்த தரிசனம், "சபையின் குரலை அமைதிப்படுத்த இயலாது என்று வரலாறு உறுதிப்படுத்துகிற விஷயத்தை எடுத்துரைக்கிறது."[27] வில்லியம் கல்லன் பிரையன்ட் என்பவரின் சாகாவாரம் பெற்ற வார்த்தைகளில் "பூமியில் போட்டு மிதிக்கப்பட்ட சத்தியமானது எழும்பும்"[28] என்பதே உண்மையாக உள்ளது.

ஏசாயா, "புல் உலர்ந்து பூ உதிரும், நமது தேவனுடைய வசனமோ என்றென்றைக்கும் நிற்கும்" என்று எழுதினார் (ஏசாயா 40:8). இயேசு, "வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை" என்று கூறினார் (மத்தேயு 24:35). அழிக்கமுடியாத வசனமானது இராஜ்யத்தின் விதையாக இருப்பதால் (லூக்கா 8:11; மத்தேயு 13:19ஐக் காணவும்), இயேசுவின் கூற்றானது, அவரது இராஜ்யம்/சபை (மத்தேயு 16:18, 19) ஒருக்காலும் அழிக்கப்பட முடியாது என்றும் அர்த்தப்படுகிறது. "பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை" (மத்தேயு 16:18).

இரண்டு சாட்சிகளும் தங்களின் மூன்று நாள் தூக்கத்தில் இருந்து விழித்தெழுந்ததுபோல் எழுந்தபோது, அது அங்கு கொண்டாடிக் கொண்டிருந்தவர்கள் மத்தியில் ஏற்படுத்திய செயல்தாக்கத்தை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா? வசனம் 11, "அவர்களைப் பார்த்தவர்களுக்கு மிகுந்த பயமுண்டாயிற்று" என்று கூறுகிறது (வசனம் 11ஆ). பூமியில் குடியிருந்தவர்கள் பயப்படக் காரணம் இருந்தது. "கொலை என்பது மனிதனுடைய கடைசி போக்கிடமாக இருப்பதால், மரணத்தில் இருந்து எழுந்தவர்களுக்கு என்னதான் செய்யப்படக்கூடும்!"[29] உலகம் எப்போதுமே, சத்தியத்தின் இசைவிணக்கத்தினால் பிரமித்துத்

*திகைப்படைந்து உள்ளது.*

*பின்பு சாட்சிகள், " 'இங்கே ஏறிவாருங்கள்' என்று வானத்திலிருந்து தங்களுக்கு உண்டான பெரிய சத்தத்தை அவர்கள் கேட்டு, மேகத்தில் ஏறி வானத்திற்குப் போனார்கள்" (வசனம் 12அ). ("இரண்டு சாட்சிகளும் வானத்திற்கு ஏறிச்செல்லுதல்" என்ற விளக்க படத்தைக் காணவும்.) தேவன்தாம் எப்போதும் கடைசி வார்த்தையைக் கொண்டுள்ளார் - "இங்கே ஏறிவாருங்கள்!" என்பவை அவரது சாட்சிகளுக்குக் கடைசி வார்த்தைகளாய் இருந்தன. இது மேகத்தில் பரலோகத்திற்குச் சென்ற இயேசுவினுடைய பரத்துக்கேறுதலைச் சிந்தைக்குக் கொண்டு வருகிறது (நடபடிகள் 1:9).[30]*

*தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள் இவ்விதமாய், அவர்கள் விசுவாசத்திற்காக மரிக்க நேர்ந்தாலும், அது வீணானதாயிராது; தேவனுடைய ஊழியம் தொடர்ந்து நடைபெறும் என்று உறுதிப்படுத்தப்பட்டனர். மற்றும், அவர்கள் கர்த்தரால் மறக்கப்படுவதில்லை என்றும் அவர்களுக்கு உறுதியளிக்கப்பட்டது; அவர்களை அவர் உயிருடன் எழுப்பி, தம்முடன் இருக்கும்படி இல்லத்திற்கு அழைத்துச் செல்வார்!*

*வசனம் 12, கர்த்தருடைய மறுவருகையின்போது சரீரப்பிரகாரமான உயிர்த்தெழுதல் இருக்கும் என்று சித்தரிக்கிறதா? (1 தெசலோனிக்கேயர் 4:17, 18; 1 கொரிந்தியர் 15:51-54ஐ வாசிக்கவும்.) ஒருவேளை இருக்கலாம். பெரும்பாலும் இது, பிற்பாடு "முதலாம் உயிர்த்தெழுதல்" என்று குறிப்பிடப் பட்டதைச் சித்தரிக்கிறது (வெளிப்படுத்தின விசேஷம் 20:5, 6): அதாவது, கிறிஸ்துவின் யுகத்தின்போது, கிறிஸ்துவுடன் வாழ்ந்து ஆளுகை செய்தல் (20:4). பிந்திய இவ்விளக்கத்தை நான் மூன்று காரணங்களுக்காக விரும்பித் தேர்ந்து கொள்கின்றேன்: (1) நமது பாடத்தில் நாம் இன்னமும் எக்காள (எச்சரிக்கை) பகுதியிலேயே இருக்கின்றோம், வெளிப்படுத்தின விசேஷம் 11:14, 15 வசனப்பகுதி வரையிலும் கடைசி (ஏழாம்) எக்காளம் ஒலிப்பதில்லை. (2) பின்தொடருகிற வசனங்கள் எக்காள (எச்சரிக்கை) மொழிநடையில் இனிய கவிதைத்துவமாக்கப்பட்டுள்ளன. வசனம் 13ல் நகரத்தின் பத்தில் ஒரு பங்கு "மாத்திரம்" விழுந்தது; ஏழாயிரம் பேர் "மாத்திரம்" கொல்லப்பட்டனர், மனிதகுலத்தில் பெரும்பான்மை யானவர்கள் ("மீதியானவர்கள்") கொல்லப்படவில்லை.[31] (3) இந்தத் தரிசனம் ஒரு அடையாளத்துவ மொழிநடையை பயன்படுத்துகிறது.*

*இருந்தபோதிலும், வசனம் 12ல் சித்தரிக்கப்பட்டுள்ள உயிர்த்தெழுதலும் பரத்துக்கேறுதலும், சரீரப் பிரகாரமான உயிர்த் தெழுதலுக்கான நம்பிக்கையைத் தருகிறது. ஒருவேளை நாம், உண்மையுள்ளவர்களின் ஆவிகள் "கிறிஸ்துவுடன் இருப்பதற்காக" (பிலிப்பியர் 1:23) பிரிந்து செல்லும்போது ஏற்படும் ஒருபகுதி நிறைவேற்றத்தை இவ்வசனம் கண்டறிகிறது என்று கூறமுடியலாம். பலவீனமுள்ள நமது உடல்கள் பலமுள்ளவைகளாய் எழுப்பப்படும்போது, கனவீனமுள்ள நமது உடல்கள் கனமுள்ளதாய் எழுப்பப்படும்போது, இறுதியான இந்த நிறைவேற்றம் வரும் (1 கொரிந்தியர் 15:42-44, 52, 53).*

*இரண்டு சாட்சிகளும் மேகத்திற்கு ஏறிச் சென்றபோது,*

"... அவர்களுடைய சத்துருக்கள் அவர்களைப் பார்த்தார்கள். அந்நேரத்திலே பூமி மிகவும் அதிர்ந்தது, உடனே அந்த நகரத்தில் பத்திலொருபங்கு இடிந்து விழுந்தது, மனுஷரில் ஏழாயிரம்பேர் பூமியதிர்ச்சியினால் அழிந்தார்கள்"[32] (வசனங்கள் 12ஆ, 13அ). மனந்திரும்பாதவர்களிடத்தில் இன்னமும் தேவன் கிரியை செய்து கொண்டிருந்தார், எனவே நாம் எக்காளம் போன்ற ஒரு எச்சரிக்கையைக் கொண்டுள்ளோம்: மகாநகரத்தின் மக்கள் தொகையில் பத்தில் ஒரு பங்கினரின் அழிவும் ஏழாயிரம் பேரின் மரணமும்.

வெளிப்படுத்தின புத்தகத்தில் இந்த ஒரு இடத்தில் மாத்திரமே "பத்தில் ஒரு பங்கு" என்ற பின்னம் குறிப்பிடப்பட்டுள்ளது. மவுன்ஸ் என்பவர், இது "(நகரத்தின் மக்கள் தொகையில்) கணிசமான ஒரு பகுதியாக உள்ளது ஆனாலும் அதைச் செயல் இழக்கச் செய்யப் போதுமானதல்ல" என்று கூறினார்.[33] ஜிம் மெக்கைகன், "பத்தில் ஒரு பகுதி பேசுகிறது, இது ... ஒருபகுதி ஊதியம் தரப்படுகிறது, எஞ்சியது பிற்பாடு வருகிறது ... என்பதாகக் காணப்படுகிறது" என்று கருத்துத் தெரிவித்தார்.[34] இது "ஏழாயிரம்" என்ற அடையாளத்துவ எண் குறிப்பிடப்படும் ஒரே ஒரு இடமாகவும் உள்ளது. "ஏழு" மற்றும் "ஆயிரம்" ஆகிய இரண்டு எண்களுமே முழுமைத்துவத்தை அடையாளப்படுத்தும் எண்களாக உள்ளன.[35] ஒரு வேளை இந்த எண், மனிதகுலத்திற்குத் தேவனுடைய எச்சரிக்கையை இது நிறைவடையச் செய்கிறது என்ற உண்மையைக் குறிப்பிடலாம். இதன்பின்பு ஏழாம் எக்காளம் ஊதப்படும் (11:14, 15). பின்பு மனந்திரும்புதலுக்கு மிகவும் தாமதமானதாகிவிடும்.[36]

எக்காள வரிசைத் தொடர் முழுவதிலும் இருந்தது போலவே, உயிருடன் இருப்பவர்களின்மீது தேவன் முதன்மையான ஆர்வம் உள்ளவராய் இருந்தார். அவரது நியாயத்தீர்ப்புகள் அவர்கள்மீது கொண்டிருந்த செயல்விளைவு என்ன? நாம், "மீதியானவர்கள்[37] பயமடைந்து பரலோகத்தின் தேவனை மகிமைப்படுத்தினார்கள்" என்று வாசிக்கின்றோம் (வசனம் 13ஆ).

"பரலோகத்தின் தேவனை மகிமைப்படுத்தினார்கள்" - அது எதை அர்த்தப்படுத்திற்று? அதிகாரம் 9ல், "நரகத்திலிருந்து வந்த ராணுவம்" "மனு ஷரில் மூன்றிலொரு பங்குபேரைக்" கொன்றபோது ... அந்த வாதைகளால் கொல்லப்படாத மற்ற மனுஷர்கள் ... மனந்திரும்பவுமில்லை" (9:18, 20). அதிகாரம் 11ன் பூமியதிர்ச்சி மாறுபட்ட விளைவை ஏற்படுத்தியதா? உயிர்பிழைத்திருந்தவர்கள் மனந்திரும்பினரா? அவர்கள் கர்த்தரிடமாய்த் திருப்பப்பட்டனரா?

9:20, 21 மற்றும் இதைப் போன்ற மற்ற வசனப்பகுதிகளின் வெளிச்சத்தில் பார்க்கும் போது, பயமுறுத்தப்பட்டிருத்தல் மற்றும் தேவனை மகிமைப்படுத்துதல் என்பவை, உயிர்பிழைத்திருந்தவர் களிடத்தில் உண்மையான மனந்திரும்புதலையும் உண்மையான மனமாற்றத்தையும் குறிக்கின்றன என்று நம்புவது மிகவும் கடினமானதாக உள்ளது. எடுத்துக்காட்டாக, 13:3 "பூமியிலுள்ள யாவரும் ஆச்சரியத்தோடே அந்த மிருகத்தைப் பின்பற்றி" என்பதைக் காண்பிக்கும். 11:13ல் பெருந்திரளான மனமாற்றம் ஏற்பட்டிருக்குமா என்பது கடினமானதாகவே

*ஒலிக்கிறது.[38] "பரலோகத்தின் தேவனை மகிமைப்படுத்தினார்கள்" என்ற சொற்றொடரைப் பற்றி, நேபுகாத்நேச்சார் என்ற அரசர், யெகோவா தேவனுக்கு மகிமையைச் செலுத்தும்படி அடிக்கடி விரட்டப்பட்டார் (தானியேல் 2:47; 3:28; 4:1-37), ஆனால் அவர் உண்மையான விசுவாசத்திற்கு மாற்றப்பட்டார் என்று எவரொருவரும் மனநிறைவு அடையமாட்டார். ஆகையால் நான், ஜிம் மெக்கைகன் என்பவரின் "அவர்கள் மனமாற்றப்படவில்லை - வெறுமனே அச்சமடைந்தனர்"[39] என்ற கூற்றை ஒப்புக்கொள்ளச் சாய்கின்றேன்.*

*இதற்கு மறுபுறத்தில் சிலர், வசனம் 13ல் பயன்படுத்தப்பட்ட இந்தத் சொற்றொடர்கள், (வெளிப்படுத்தின விசேஷத்தின் மற்ற வசனப்பகுதிகள் உட்பட) வேதாகமத்தின் மற்ற இடங்களில் மனந்திரும்புதலைக் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டுள்ளன என்று சுட்டிக்காண்பிக்கின்றனர்.[40] ஒருவேளை, தேவனுடைய எச்சரிக்கைகளுக்குப் பெரும்பான்மையானவர்கள் நேர்மறையாக பதில் செயல் செய்யாவிட்டாலும், சிலர் அதைச் செய்வார்கள் என்ற நம்பிக்கை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இது, 13ம் வசனத்தின் கடைசிப்பகுதியில் அர்த்தப்படுத்தப்பட்டிருப்பினும் இல்லையென்றாலும், இதுவே உண்மையாக உள்ளதென்று நாம் அனுபவத்தில் அறிகின்றோம். தேவபக்தியற்றவர்கள் மத்தியிலும் சிலர் இன்னமும் தொடப்படக்கூடிய இருதயத்தைக் கொண்டிருப்பதற்காகத் தேவனுக்கு நன்றி.*

## *முடிவுரை*

*இரண்டு சாட்சிகளின் வரலாற்றில் இருந்து நாம், சாட்சியளித்தல் பற்றி நீங்கள் அறிய வேண்டிய ஐந்து உண்மைகளைத் தரவழைத்துள்ளோம்: (1) மனிதர்கள் உங்களை வெறுத்தாலும், (2) தேவன் உங்களை பாராட்டுவார்; (3) மனிதர்கள் உங்களைக் கொலைசெய்தாலும், (4) தேவன் உங்களைப் பாதுகாப்பார்; (5) நீங்கள் உண்மையுடன் நிலைத்திருந்தால் இறுதியில் தேவன் உங்களுக்குப் பலனளிப்பார்.*

*வசனங்கள் 3முதல் 13வரை மீண்டும் வாசிக்க நேரம் எடுத்துக் கொள்ளுங்கள். நீங்கள் பெறும் முற்றான மனப்பதிவு என்ன? இது வெற்றியின் மனப்பதிவாக இருப்பதில்லையா? "நாம் வெற்றியடைகின்றோம்![41] சிலவேளைகளில் நாம் இழந்துபோனதுபோலத் தோற்றம் ஏற்படலாம், ஆனால் முடிவில் நாம் வெற்றியடைகின்றோம். நாம் மரித்தாலும், நாம் வெற்றியடைகின்றோம்!" அந்த வார்த்தைகளை மீண்டும் வாசிக்க நீங்கள் விரும்பலாம். அவற்றைச் சத்தமிட்டுக் கூற நீங்கள் விரும்பலாம். அவற்றை ஒரு துண்டுத்தாளில் எழுதி, அதை ஒரு நாளில் பலமுறை நீங்கள் வாசிக்கக் கூடிய இடத்தில் ஒட்டிவைக்க நீங்கள் விரும்பலாம். அந்தத் துண்டுத்தாளை நீங்கள் உங்களுடன் எடுத்துச்செல்ல விரும்பலாம். இதுவே உங்களுக்கும் எனக்கும் தேவனுடைய வல்லமைமிகுந்த செய்தியாக உள்ளது: நாம் வெற்றியடைகின்றோம்!*

*சாட்சிகளின் வரலாறு, ஆறாம் மற்றும் ஏழாம் எக்காளங்களுக்கு*

இடையில் உள்ள இடையிசையை நிறைவு செய்கிறது. இவ்விதமாக, ''இரண்டாம் ஆபத்து கடந்துபோயிற்று, இதோ, மூன்றும் ஆபத்து சீக்கிரமாய் வருகிறது'' என்று 14ம் வசனம் அறிவிக்கிறது. ஏழாம் எக்காளம் பற்றிய வசனப்பகுதியைப் படிப்பதற்கு நாம் தயாராக இருக்கின்றோம்.

இந்த பாடத்தை நாம் முடிக்கும் இவ்வேளையில் நான், ''ஏழாம் எக்காளம் ஊதப்படுதலுக்கு நீங்கள் தயாராயிருக்கின்றீர்களா?'' என்று கேட்டாக வேண்டும். நீங்கள் உண்மையிலேயே மனந்திரும்பாமல், உண்மையிலேயே தேவனிடத்திற்குத் திரும்பாமல், அவருடைய மகிமையை ஒப்புக்கொள்ளுதல் என்பது சாத்தியமானதாக உள்ளதா? நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இருந்தால், கர்த்தரிடத்தில் உங்கள் ஊழியத்தில் அரைமனதுடன் இருந்து கொண்டு அவருடைய மகிமையை ஒப்புக்கொள்ளுதல் என்பது சாத்தியமானதாக உள்ளதா? இயேசுவுக்காக மரிக்கும்படி நீங்கள், இன்றே அழைக்கப்பட்டால், நீங்கள் ஆயத்தமாய் இருப்பீர்களா? உண்மையுள்ளவர்களுக்கு மாத்திரமே தேவன் பலனளிக்கின்றார் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். உண்மையுள்ளவர்கள் மாத்திரமே, ''நாங்கள் வெற்றியடைகின்றோம்!'' என்று கூறமுடியும். நீங்கள் ஆவிக்குரிய தேவையைக் கொண்டிருந்தால், அதைப் பற்றி இன்றே கவனியுங்கள்![42]

---

## போதகர்கள் மற்றும் பிரசங்கியார்கள் ஆகியோருக்கான குறிப்புகள்

*8ம் வசனத்தை நீங்கள் கலந்துரையாடுகையில் ''மகா நகரம்'' பற்றிய வரைவட்டவணையொன்றை உண்டாக்க நீங்கள் விரும்பலாம். நீங்கள் பயன்படுத்த மாதிரியொன்று இங்கு தரப்படுகிறது:*

| ''மகா நகரம்'' | | |
|---|---|---|
| **இடம்** | **குணம்** | **முடிவு** |
| சோதோம் | குற்றம் | தேவனால் நியாயந்தீர்க்கப்பட்டது |
| எகிப்து | சர்வாதிகாரம் | தேவனால் நியாயந்தீர்க்கப்பட்டது |
| எருசலேம் | கீழ்ப்படியாமை | தேவனால் நியாயந்தீர்க்கப்பட்டது |

*வெளிப்படுத்தின விசேஷம் 11:3-14ஐப் போதிக்க அல்லது பிரசங்கிக்க மற்ற சாத்தியக்கூறுகள் பின்வருமாறு: ''தேவன் எப்போதுமே கடைசி வார்த்தையைக் கொண்டுள்ளார்'' (''இங்கே வாருங்கள் ...'' என்பது கடைசி வார்த்தையாக உள்ளது); ''இருளும் மகிமையும்.'' சார்லஸ் ரைரீ இந்தப் பகுதியை ''இரண்டு சாட்சிகள்'' என்று அழைத்து, இதை நான்கு பகுதிகளாகப் பிரித்தார்: (1) அவர்களின் காலம் (வசனம் 3);*

*(2) அவர்களுக்குச் சோதனைகள் (வசனங்கள் 4-6); (3) அவர்களின் முடிவு (வசனங்கள் 7-10); (4) அவர்களின் மாற்றம் (வசனங்கள் 11-14).*[43] *ஆல்பர்ட் பால்டிங்கர், அதிகாரம் 11 முழுவதையும் "வெற்றியின் குரல்கள்" என்று தலைப்பிடப்பட்ட ஒரு பாடத்தில் எடுத்துரைத்து முடித்தார். அவரது வரைக்குறிப்பின் ஒரு தழுவுதல் பின்வருமாறு: (1) மறு உறுதிப்படுத்தும் குரல் (வசனங்கள் 1, 2); (2) அலைவுபடாத குரல் (வசனங்கள் 3-10); (3) வெற்றிகரமான குரல் (வசனங்கள் 11-14).*[44]

---

*குறிப்புகள்*

[1]Eddie Cloer, Unpublished lecture notes on Revelation, n.d. [2]*நீங்கள் மூன்று உண்மைகளை மறுகண்ணோட்டமிட விரும்பலாம்.* [3]*"இங்கே ஏறி வாருங்கள்" என்பது கிரேக்க மொழியில் நிகழ்கால வினைச்சொல்லாக உள்ளது, இது தொடர்ந்து நடைபெறும் செயலைக் குறிக்கிறது. பொல்லாங்கின் சக்திகள், நல்லவை மற்றும் உண்மையானவைகளை எதிர்த்து நிற்கத் தொடர்ந்து எழும்புகின்றன (17:8ஐக் காணவும்).* [4]*நாம் இந்த யுத்தத்தைப் பற்றி, 12ம் அதிகாரத்தின் மீதான நமது பாடத்தில் அதிகம் விபரமாகக் கலந்துரையாடுவோம்; ஆனால் இப்போதைக்குப் பின்வரும் கருத்துக்களை வலியுறுத்த என்னை அனுமதியுங்கள்: (1) இது உலகப்பிரகாரமான யுத்தமாயிராமல், ஆவிக்குரிய யுத்தமாக உள்ளது, மற்றும் (2) இது ஒருமுறை மாத்திரம் நடைபெறும் மோதலாக இல்லாமல், தொடர்ந்து நடைபெறும் யுத்தமாக உள்ளது (எபேசியர் 6:12ஐக் காணவும்).* [5]*லூக்கா 10:19ல் இயேசுவின் வாக்குத்தத்தத்தைக் கண்ணோக்குங்கள்: அவர் தமது சீஷர்களிடத்தில், "ஒன்றும் உங்களை சேதப்படுத்தமாட்டாது" என்று கூறினார். பிற்பாடு அவர்களில் சிலர் தங்கள் விசுவாசத்திற்காக வேதசாட்சிகளாக மரித்தனர் - ஆனால் அவர்களின் ஆத்துமாக்கள் "சேதப்படவில்லை."* [6]*இது "மிருகம்" பற்றிய முப்பத்தியாறு குறிப்புகளில் முதலாவதாகும்.* [7]"Beast" *என்ற வார்த்தைக்கு முன்பு திட்டவட்டமான சுட்டுச்சொல் (*"the"*) இருப்பதால், இந்த மிருகம், யோவானின் வாசகர்களில் பலருக்கு நன்கு பழக்கப்பட்டதாக இருந்திருக்கும் என்று பலர் யூகிக்கின்றனர், ஆனால் அவ்வாறு இருந்திருக்க அவசியம் இல்லை. வசனம் 3ல் கிரேக்க வசனத்தில்,* "*the* two witnesses of me" *என்றுள்ளது, ஆனால் சாட்சிகளின் அடையாளம் வாசகர்களுக்கு நன்கு பழக்கப்பட்டதாக இருந்திராது: இரண்டு சாட்சிகள் பற்றிய உருவகம் 11ம் அதிகாரத்திற்கு முன்போ அல்லது பின்போ எவ்விடத்திலும் காணப்படுவதில்லை.* [8]*மிருகத்தின் அடையாளத்துவத்தை அறிவதற்கு, வெளிப் படுத்தின விசேஷம் 4 என்ற புத்தகத்தில் உள்ள, "கண்டு. கவனித்து, கற்றுக் கொள்ளுங்கள்" என்ற பாடத்தில் காணவும். மிருகம் என்பது பாதாளக்குழியில் இருந்து வெளிவந்த இராஜாதான் (9:11) என்று அடிக்கடி யூகிக்கப்படுகிறது, ஆனால் விஷயம் இவ்வாறு இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. இந்த மிருகத்தை "அந்திக்கிறிஸ்து" என்பவனாகப் பல எழுத்தாளர்கள் அடையாளப்படுத்துகின்றனர். அடுத்து வரும் "அந்தி கிறிஸ்துவும் வெளிப்படுத்தின விசேஷமும்" என்ற பாடத்தில் 9:11க்கான குறிப்புகளைக் காணவும்.* [9]*இந்தப் புத்தகத்தில் "பாவத்தின் சுய அழிவுத்தன்மை" என்ற முந்திய பாடத்தில் காணவும்.* [10]*"முடிந்திருக்கும்போது" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை, "சாட்சியமானது தனது முடிவை அல்லது நோக்கத்தை அடைந்திருந்தது" என்று சுட்டிக்காண்பிக்கிறது* (Leon Morris, *Revelation*, rev. ed., The Tyndale New Testament Commentaries [Grand Rapids,

Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1987], 145).

[11]*அடையாளத்துவம் மற்றும் உண்மை நிலை ஆகியவற்றிற்கு இடையில் உள்ள வேறுபாடு பற்றி ஒரு சுருக்கமான விளக்கம் அவசியமாக இருக்கலாம்: யோவானின் தரிசனத்தில், சாட்சிகள் தங்களை மிருகம் தாக்குவதற்கு முன்பு தங்கள் பிரசங்கித்தலை முடித்திருந்தனர். உண்மை நிலையில், வசனத்தின் போதகர்களை அவர்கள் போதித்துக் கொண்டிருக்கும்போதே கூட பொல்லாங்கின் சக்திகள் தொடர்ந்து தாக்குகின்றன (6:9-11ல் கிறிஸ்தவர்கள் தொடர்ந்து கொல்லப்படுவது பற்றிக் குறிப்பிடப்படுவதை ஆழ்ந்து சிந்தியுங்கள்). முரண்பாடு எதுவும் இல்லை. ஒன்று அடையாளத்துவமாக உள்ளது; இன்னொன்று உண்மை நிலையாக உள்ளது - ஆனால் முடிவு விளைவு ஒரேமாதிரியானதாக உள்ளது.* [12]*ஏசாயா 55:11ஐக் காணவும்.* [13]*"மரித்த உடல்கள்" பற்றிய வசனம் 8லும் 9லும் மூன்று குறிப்புகள் உள்ளன, முதல் இரண்டு குறிப்புகள் ஒருமையில் (நேரடியான அர்த்தத்தில் "மரித்த உடல்") இருக்கையில் மூன்றாவது குறிப்பு பன்மையில் (நேரடி அர்த்தத்தில், "மரித்த உடல்கள்'') உள்ளது. முதல் இரு குறிப்புகளும் - இதே வகையில் மக்கள் பாதிக்கப்படும்போது, நாம் "அவர்களின் இருதயம்" என்று (ஒருமையில்) கூறுகின்ற அதே வகையில் - சாட்சிகளின் ஊழியம் மற்றும் முடிவு ஆகியவற்றின் ஒருமைத் தன்மையைக் குறிப்பிடுகின்றன.* [14]*11ம் அதிகாரத்தில் ''மகா'' என்ற வார்த்தை பலமுறை வருவதைக் காணுங்கள். "மகா" என்பது இந்த அதிகாரத்தின் திறவுகோல் வார்த்தையாக உள்ளது.* [15]*இந்த "வெகுமதிகள்" என்பவை அவர்களின் பண்டிகை விருந்துணவுகளில் தேர்ந்துகொள்ளப்பட்ட/உச்சிதமான பகுதிகள் என்று சிலர் நினைக்கின்றனர் (எஸ்தர் 9:19ஐக் காணவும்).* [16]Henry B. Swete, *The Apocalypse of St. John* (Cambridge: MacMillan Co., 1908; reprint, Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., n.d.), 138. [17]*அந்த உடல்களை புதைக்க விரும்பியது யார் என்பது பற்றி நமக்கு ஒன்றும் கூறப்படவில்லை, ஏனென்றால், அந்த விபரம் இந்தக் காட்சிக்கு ஏதொன்றையும் கூட்டுவதில்லை. அவர்கள் நண்பர்களாகவோ அல்லது பரிவிரக்கம் கொண்ட கிறிஸ்தவர் அல்லாதவர்களாகவோகூட இருந்திருக்கலாம். (நடபடிகள் 19:31ல் கிறிஸ்தவர் அல்லாத சில நண்பர்கள் பவுலைக் காப்பாற்ற முயற்சி செய்தனர்.)* [18]*"வீதி" என்று 11:8ல் மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தை "பரந்த" அல்லது "விசாலமான" என்று நேரடி அர்த்தப்படுகிறது (எனவே தமிழில் இவ்விடத்தில் "விசாலமான வீதி" என்றுள்ளது) (இது மத்தேயு 7:13ல் "விசாலமான" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது). தமிழில் உள்ள "விசாலமான வீதி" என்பது நேரடி அர்த்தமான மொழிபெயர்ப்பாக உள்ளது. இது ஒரு நகரத்தின் பிரதான தெருவுக்குரிய பொதுவான சொற்றொடராகும்.* [19]*"ஜனங்களிலும், கோத்திரங் களிலும், பாஷைக்காரரிலும், ஜாதிகளிலுமுள்ளவர்கள்'' (11:9) என்ற சொற் றொடரானது "சகல இடங்களிலும் உள்ள சகல மனிதர்கள்" என்ற வழக்கமான கருத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வசனப்பகுதியில், இந்த வார்த்தைகள், ''பூமியில் குடியிருக்கிறவர்கள்'' (11:10) என்ற சொற்றொடருக்குப் பதிலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. (பூமியில் குடியிருப்பவர்கள் என்பவர்கள், அவிசுவாசிகளாக, கிறிஸ்தவர் அல்லாதவர்களாக இருந்தனர்.)* [20]*உங்கள் உரையைக் கேட்பவர்களுக்குப் பழக்கமான சில விவரிப்புகளைக் கொடுக்க நீங்கள் விரும்பலாம். பர்ட்டன் காஃப்மேன், வரலாற்றிலிருந்து பல விவரிப்புகளைக் கொடுத்தார்* (*Commentary on Revelation* [Austin, Tex.: Firm Foundation Publishing House, 1979], 251-52).

[21]Michael Wilcock, *I Saw Heaven Opened: The Message of Revelation*, The Bible Speaks Today Series (Downers Grove, Ill.: Intervarsity Press, 1975), 106. [22]G. B. Caird, *A Commentary on the Revelation of St. John the Divine* (London: Adam & Charles Black,

1966), 138. See also Robert Mounce, *The Book of Revelation,* The New International Commentary on the New Testament Series (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1977), 226. [23]Martin H. Franzmann, *The Revelation to John* (St. Louis, Mo.: Concordia Publishing House, 1976), 80-81. [24]Caird, 138. [25]Eugene H. Peterson, *Reversed Thunder* (San Franciso: HarperCollins Publishers, 1988), 115. *ஜட்ஸோனியா சபையின் எனது வகுப்பில், ஜோயல் டேவிஸ் "அவர்களின் அணிவகுப்பில் மழை பெய்தது" என்று விமர்சனம் செய்தார். [26]ஆதியாகமம் 2:7; 6:17; 7:15, 22ஐக் காணவும். [27]*Albert H. Baldinger, *Preaching From Revelation*: *Timely Messages for Troubled Hearts* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1960), 55. [28]William Cullen Bryant, "The Battlefield," 1839; quoted in John Bartlett, *Bartlett's Familiar Quotations*, 16th ed., gen. ed. Justin Kaplan (Boston: Little, Brown and Co., 1992), 411. [29]Mounce, 228. *[30]சாட்சிகள் மேகத்தில் பரலோகத்திற்குத் செல்லுதல் என்பது நமக்கு எலியா வானத்திற்கு ஏறிச்சென்றதை நினைவூட்டுகிறது (2 இராஜாக்கள் 2:11).*

*[31]12ம் வசனம், சரீர உயிர்த்தெழுதல் பற்றிப் பேசுகிறது என்று நம்புகின்ற விளக்கவுரையாளர்கள், 13ம் வசனம், கிறிஸ்து வரும்போது சகலமும் அழிக்கப்படுவதைச் சித்தரிப்பதாக விளக்குகின்றனர் - ஆனால் இதன் மொழிநடை அதைக் குறிப்பதில்லை. இதையே நம்புகின்ற மற்றவர்கள், நாள்வரிசைமுறையானது 12ம் வசனத்திற்குமுன் 13ம் வசனம் வருவதாக கூறுகின்றனர். இது சாத்தியமாக உள்ளது. ஆனால் அது இவ்வசனப்பகுதியை வாசிக்கும் இயல்பான வழிமுறையாக இருப்பதில்லை. [32]நாம் பூமியதிர்ச்சியை இதற்கு முன் 6ம் அதிகாரத்தில் கண்டோம். ஆனால் அந்த பூமியதிர்ச்சி உலகத்தின் முடிவில் வரவிருப்பதாக, பூமியை முற்றிலுமாக அழிப்பதைச் சித்தரிப்பதாக நாம் தீர்மானித்தோம். 11ம் அதிகாரத்தில் வருகிற பூமியதிர்ச்சியானது ஒருபகுதி மாத்திரம் சேதம் விளைவிப்பதாக உள்ளது. பூமியதிர்ச்சி அடையாளத்துவ முக்கியத்துவம்பற்றி "வெளிப்படுத்தின விசேஷம், 2" என்ற புத்தகத்தில் "மகாப்பெரிய நாள் ... வருகிறது" என்று பாடத்தில் காணவும். [33]*Mounce, 229. [34]Jim McGuiggan, *The Book of Revelation,* Looking Into the Bible Series (Lubbock, Tex.: International Biblical Resources, 1976), 163. *''மகாநகரத்திற்கு (பாபிலோனுக்கு)த் தரப்பட்ட எஞ்சிய கூலியைப்'' பற்றி 18ம் அதிகாரத்தில் காணவும். [35]''ஏழு'' மற்றும் ''ஆயிரம்'' என்ற எண்களின் அடையாளத்துவ முக்கியத்துவம் பற்றி வெளிப்படுத்தின விசேஷம் 1ல் "இங்கே வலுசர்ப்பங்கள் உள்ளன" என்ற பாடத்தில் காணவும். [36]"ஏழாயிரம்" என்ற எண்ணுக்கு, குறிப்பாக எந்த அடையாளத்துவ முக்கியத்துவமும் இல்லை, அதாவது இது பெரிய அளவிலான நகரத்தின் மக்கள் தொகையில் ஏறக்குறைய பத்தில் ஒரு பங்கான மக்கள்தொகையாக மாத்திரமே உள்ளது என்று சிலர் நம்புகின்றனர். மற்றவர்கள், எலியாவின் நாட்களில் பாகாலுக்கு முடங்காதிருந்த ஏழாயிரம் பேரைச் சுட்டிக் காண்பிக்கின்றனர் (1 இராஜாக்கள்19:18); வெளிப்படுத்தின விசேஷம் 11ன் ஏழாயிரம்பேர் என்பது 1 இராஜாக்கள் 19ன் "எதிர்மறை மாற்றுப்பிரதி" என்று அவர்கள் நம்புகின்றனர். [37]*KJV *வேதாகமத்தில்* "the remnant" *(தமிழில் இது "மீதியானவர்கள்") என்றுள்ளது, ஆனால் மூலவசனம்* "the rest" *(எஞ்சியவர்கள்) என்பதற்கு ஆதரவாக உள்ளது (*NKJV *வேதாகமத்தில் காணவும்). [38]சிலர் அதிகாரம் 11ல் இவ்விடத்தில் காணப்படும், கற்பனையான பெருந்திரள் மனமாற்றத்தை யூதர்களுக்கு மாத்திரமே மட்டுப்படுத்துகின்றனர், ஆனால் தேவன் மற்ற மக்களினங்களின்மீது கொண்டுள்ள ஆர்வத்தைக் காட்டிலும் அதிகமான ஆர்வத்தை யூதர்கள்மீது இனியும் கொண்டிருப்பதில்லை என்பதை நாம் ஏற்கனவே கண்டுள்ளோம். [39]*McGuiggan, 163. *[40]யோசுவா 7:6, 19; ஏசாயா 42:12; எரேமியா 13:16; லூக்கா 18:13; 1 பேதுரு 2:12; வெளிப்படுத்தின விசேஷம் 14:7; 15:4; 16:9*

ஆகிய வசனங்களைக் காணவும்.

[41]இந்தப்பாடத்தை ஒரு வகுப்பிலோ அல்லது ஒரு பிரசங்கமாகவோ பயன்படுத்தும்போது, ஏற்புடையதென்றால் நீங்கள், உங்கள் உரையைக் கேட்பவர்களை, ''நாம் வெற்றிகொள்கின்றோம்!'' என்ற வார்த்தைகளை உங்களுடன் சேர்ந்து திரும்பக் கூறும்படி கேட்டுக்கொள்ள விரும்பலாம். [42]இந்தப் பாடம் ஒரு பிரசங்கமாகப் பயன்பட்டதென்றால் உங்கள் உரையைக் கேட்பவர்களுக்கு கர்த்தரிடத்தில் திரும்புவது எப்படி என்று கூறுங்கள். [43]Charles Caldwell Ryrie, *Revelation* (Chicago: Moody Press, 1968), 72-75. [44]Baldinger, 53-57.

---

## மறுகண்ணோட்டம் & கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்


1. தேவனுக்குச் சாட்சியளித்தல் பற்றி நீங்கள் அறிய வேண்டிய மூன்று உண்மைகளை (முந்திய பாடத்தில் இருந்து) மறுகண்ணோட்டம் இடவும்.
2. இந்தப் பாடத்தின்படி, சாட்சியளித்தல் பற்றி நீங்கள் அறிய வேண்டிய நான்காவது உண்மை என்ன?
3. நாம் தேவனால் பாதுகாக்கப்பட்டிருப்பினும், எவ்வகைகளில் நாம் தாக்குதலுக்கு உள்ளானவர்களாய் நிலைத்திருக்கின்றோம்?
4. அதிகாரம் 11ல் வரும் "மிருகம்" பற்றி நாம் அறிவது என்ன?
5. பாதாளக்குழியைப் பற்றி "பாவத்தின் சுய அழிவுத்தன்மை" என்ற பாடம் கூறுவதை மறுகண்ணோட்டமிடவும்.
6. இந்தப் பாடத்தின்படி, "அவர்கள் தங்கள் சாட்சியைச் சொல்லி முடித்திருக்கும்போது'' என்ற சொற்றொடரின் முக்கியத்துவம் என்ன?
7. பொல்லாங்கின் சக்திகளால் சுவிசேஷத்தின் வளர்நிலையை நிறுத்த முடியுமா?
8. பூமியில் குடியிருந்தவர்கள் சாட்சிகளின் உடல்களைப் புதைக்க அனுமதிக்காதது ஏன்?
9. சோதோம், எகிப்து மற்றும் எருசலேம் (அதாவது, கிறிஸ்து மற்றும் அப்போஸ்தலர்களின் நாட்களில் இருந்த எருசலேம்) பற்றி நீங்கள் அறிவது என்ன? இந்தப் பெயர்கள், "மகாநகரத்தின்'' குணம் பற்றி உங்களுக்குக் கூறுவது என்ன? இந்தப் பெயர்கள், "மகா நகரத்தின்'' முடிவைப் பற்றி உங்களுக்குக் கூறுவது என்ன?
10. இந்தப் பாடத்தின்படி, சாட்சியளித்தல் பற்றி நீங்கள் அறிய வேண்டிய ஐந்தாவது உண்மை என்ன?
11. இந்தப் பாடத்தின்படி, "$3^1/_2$" என்ற அடையாளத்துவ எண்ணின் அர்த்தத்தை மறுகண்ணோட்டம் இடவும். "$3^1/_2$" ஆண்டுகள் எதிர். "$3^1/_2$" நாட்கள் என்பவற்றின் முக்கியத்துவம் என்ன?
12. வசனம் 12, சரீர உயிர்த்தெழுதலையா அல்லது அடையாளத்துவ (ஆவிக்குரிய) உயிர்த்தெழுதலையா எதைச் சித்தரிக்கிறது என்று

*நீங்கள் நினைக்கின்றீர்கள்? எவ்வகையிலும் வசனம் 12, நாம் ஒரு நாளில் உயிர்ப்பிக்கப்படுவோம் என்ற நம்பிக்கையைக் கொடுக்கிறதா?*

13. *பூமியதிர்ச்சி மனிதர்கள் மீது கொண்டிருந்த செயல்விளைவு என்ன? இது அவர்கள் மனந்திரும்பினார்கள் என்று அர்த்தப்படுவதாக நீங்கள் நினைக்கின்றீர்களா?*
14. *இரண்டு சாட்சிகளின் வரலாற்றைப் படிக்கும்போது நீங்கள் பெறுகின்ற முற்றான மனப்பதிவு என்ன?*



கொல்லப்பட்ட இரண்டு சாட்சிகள் (11:7)



ஏளனம் செய்யப்பட்ட இரண்டு சாட்சிகள் (11:8-10)



***இரண்டு சாட்சிகளும் வானத்திற்கு ஏறிச்செல்லுதல் (11:12)***